# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 137 / 2025

| Deposition of Witness for | Prosecution PW10 |
|---|---|
| | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Sampath |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 8th day of January, 2026.

**( Accused produced on remand warrant )**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் மதியம் 04.20 மணி

நான் தற்போது சென்னாகரணியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். DSP இந்த வழக்கு குறித்து விசாரித்துக் கொண்டிருந்தார் அப்போது நான்

விசாரணை செய்ததற்கு அத்தாட்சிக்காக என்னிடம் போன் நம்பர், விலாசம் ஆகியவற்றை வாங்கிக்கொண்டு என்னிடம் சாட்சியம் அளிக்க கூறினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் போலீசார் விசாரணையில் கடந்த 07-01-2025 ஆம் தேதி சுமார் காலை 7.00 மணிக்கு இந்த வழக்கு சம்பந்தமாக ஊத்துக்கோட்டை DSP அவர்கள் என் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் அதில் நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த குணசீலன் சாட்சியாக கையொப்பமிட்டதாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**இல்லை**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 137 / 2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW9<br>Defence<br>Court |

Name : Thiru. Sekar

Father / Husband Name :

Village :

Taluk :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 8th day of January, 2026.

**( Accused produced on remand warrant )**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் மதியம் 04.05 மணி

நான் தற்போது சென்னாகரணியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 06-01-2025 அன்று ஏழுமலை எனக்கு போன் செய்தார். பூங்கொடி

புதருக்கு அருகில் படுத்திருக்கிறார் வந்து பார்க்கும் படி என்னிடம் கூறினார். நான் அங்கு சென்று பார்க்கும்போது பூங்கொடி துணியில் பின்பக்கம் இரத்தம் வந்து கொண்டிருந்தது. பின்னர் பூங்கொடியின் உறவினருக்கு போன் செய்து கூறினேன். பூங்கொடியின் உறவினர்கள் அகிலா, மற்றும் அவருடைய பேத்தி வந்தார்கள். மறுநாள் காலையில் பூங்கொடியை ராஜா கற்பழித்ததாக தெரியவந்தது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ராஜா என் ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். நான் ஊரிலிருந்து ராஜாவிற்கும், ராஜாவின் நண்பர்கள் தினேஷ், விக்னேஷ், பிரகாஷ் ஆகியோரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் எங்கள் ஊரில் உள்ள மேட்டுக்கண்டியை பள்ளியில் பள்ளி வாகனம் ஓட்டிக்கொண்டிருந்தேன். நான் மாலை 3.50 மணிக்கு வீட்டிலிருந்து புறப்படுமபோது எனக்கு ஏழுமலையிடமிருந்து போன் வந்தது. என் வீட்டிற்கும் எங்கள் ஊரில் உள்ள ராஜா விழுந்துகிடந்த மஞ்சுளா வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 100 அடி தூரம் இருக்கும். சம்பவயிடத்திற்கு நான் நடந்து சென்றேன். சம்பவத்தன்று அன்றைய தினம் ராஜாவை நான் காலையிலிருந்து ஊரில் பார்த்தேனா என்றால் இல்லை. ராஜா சம்பவத்தன்று 3.30 மணியளவில் மஞ்சுளா வீட்டருகில் குடித்துவிட்டு விழுந்து கிடந்தார் என்று என்னிடம் தகவல் யாராவது கூறினார்களா என்றால் இல்லை. ராஜா தான் பூங்கொடியை கற்பழித்தாரா என்ற விவரம் ஊர்காரர்கள் சொல்லி மறுநாள் தான் எனக்கு தெரியும். பூங்கொடியை நான் பார்த்தபோது அப்போது அன்றைய தினம் ராஜா தான் அவ்வாறு செய்தார் என்று யாரும் அன்றைய தினம் கூறவில்லை. அன்றை தினம் பாலப்பணி நடைபெறும் இடத்தில் உள்ள வடமாநிலத்தவர்கள் யாரோதா தான் பூங்கொடிய கற்பழித்துவிட்டார்கள் என்று ஊரில் பேசிக் கொண்டார்கள் என்றால் சரிதான். சாட்சி ஏழுமலையும் என்னிடத்தில் அவ்வாறு தான் கூறினார். நீலாவதிக்கும், பூங்கொடியின் உறவினருக்கும் நான் தகவல் சொன்ன போது வடமாநிலத்தவர்கள் பற்றி நான் கூறினேனா என்றால் இல்லை. நான்

பூங்கொடியை சென்று பார்த்தபோது மேலாடை இல்லாமல் இருந்தார் என்றும் புடவை இடுப்பில் தான் இருந்தது என்றால் சரிதான். பூங்கொடியை பார்த்தபோது அவர் சுயநினைவுடன் இருந்தாரா என்றால் அவர் முட்டிக்கால் போட்டு கைகளை கீழே ஊன்றியபடி இருந்தார். அவர் என்னிடம் எந்த தகவலும் கூறவில்லை. யார் அவரை அவ்வாறு செய்தார் என்று எந்த விவரமும் என்னிடம் கூறவில்லை என்றால் சரிதான்.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

பூங்கொடியை நீங்கள் பார்க்கும்போது அவரது உடம்பில் துணிஇருந்ததா ?

**<u>பதில்</u>**

பூங்கொடியை நான் பார்த்தபோது அவருடைய ஜாக்கெட் கழண்டு இருந்தது. பின் பக்கமாக பார்த்தேன் இடுப்பில் புடவை இருந்தது.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 137 / 2025

| Deposition of Witness for | Prosecution PW8<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Elumalai |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 8th day of January, 2026.

**( Accused produced on remand warrant )**

சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் மதியம் 03.50 மணி

நான் தற்போது சென்னாகரணியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 2025 ஆம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகமில்லை. சுமார் மாலை 4.00

மணியளவில் நான் என் மாடுகளை சென்னாகரணி ஏரியில் கட்டி வைத்திருந்தேன். அந்த மாடுகள் கயிற்றை அறுந்து ரோட்டில் நின்று கொண்டிருந்தது. அதை ரோட்டிலிருந்து கழினிக்கு ஓட்டிக்கொண்டு சென்றேன். பின்னர் வெயிலாக இருப்பதால் வீட்டிற்கு செல்லலாம் என்று வந்தேன். அங்கு பூங்கொடி என்பவர் துணியில்லாமல் ரோட்டின் ஓரத்தில் மண்பாதையில் விழுந்து கிடந்தார். என் வீட்டிற்கு அருகில் இருக்கும் சேகர் என்பவருக்கு நான் போன் செய்து பூங்கொடி துணியில்லாமல் விழுந்து கிடக்கிறார் உடனே வா என்று கூறினேன். பூங்கொடியின் வீட்டு ஆட்கள் வந்தார்கள். நான் என் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் போலீசார் விசாரணையில் சம்பவயிடத்தில் எங்கள் ஊரைச்சேர்ந்த ராஜா என்பவர் புதரிலிருந்து வெளியே வந்து மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு ஓடியதை நான் பார்த்ததாகவும், எங்கள் காலனியை சேர்ந்த பூங்கொடி சம்பவயிடத்தில் நான் பார்த்ததாகவும் பூங்கொடி என்னிடம் தான் பாத்ரூம் போக வந்ததாகவும் ராஜா தன்னை பின்னாலிருந்து தன் முகத்தில் குத்தி புடவையை கிழித்து தன்னை கற்பழித்ததாகவும் அந்த விஷயத்தை என்னிடம் பூங்கொடி சொன்னதாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் பார்க்கும்போது பூங்கொடி ஏரிக்கு போகும் வழியில் சுயநினைவுடன் தான் இருந்தார்களா என்றால் சுயநினைவுடன் தான் இருந்தார்கள் ஆனால் உடலில் துணியில்லை. நான் பூங்கொடியை பார்த்த இடத்திற்கும் ஏரிக்கரை புதருக்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 அடியிருக்கும். நான் போன் செய்து சேகர் தகவல் தெரிவித்ததாக கூறியுள்ளேன். சேகர் மட்டும் 5 நிமிடம்

கழித்து வந்தார் பின்னர் ஊர்காரர்கள் வந்தார்கள். பூங்கொடியின் உறவினருக்கு நான் தகவல் கூறினேனா என்றால் சேகர் தகவல் கூறினார். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள நெடுஞ்சாலை பாலப்பணி நடைபெறும் வடமாநிலத்தவர்கள் தங்கியிருக்கும் இடத்திற்கும் இடையே சுமார் 2000 அடி தூரமிருக்கும். அந்த ஏரிக்கரையை தான் எங்கள் கிராம மக்கள் அனைவரும் இயற்கை உபாதையை கழிப்பதற்காக பயன்படுத்துவார்கள் என்றால் சரிதான். அங்கு ஊர்காரர்கள் அடிக்கடி வந்து போவார்கள் என்றால் சரிதான். நான் 4.00 மணிக்கு பூங்கொடியை பார்க்கும் போது அதற்கு முன்பதாக யாராவது பூங்கொடியை பார்த்தாக தகவல் கூறினார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.